நல்லூர் இன நாலகம்
மாநகராட்சி
யாழ்

Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஐப்பசி 06 | (22 - 10 - 1992) | வியாழக்கிழமை | ஓசை 247

## சீனிக்குப் பதில் சக்கரின் சிலவகை சோடாக்களில் கலப்பு

தேவி பிராண்ட் சோடா, சுகந்தி பிராண்ட் சோடா என்ற வியாபாரப் பெயரில் விற்கப்படும் பானங்களில் உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய சக்கரின் கலக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனியைவிட மிக இனிமையான இப்பொருள் சீனிக்குப் பதிலாக இப்பானங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி ரி. மகாதேவனால் இந்தப் பானங்கள் சில செல்வச்சந்நிதியில் கைப்பற்றப்பட்டு யாழ். பல்கலைக்கழக உயிர் இரசாயனப் பகுதி ஆய்வுகூடத்தில் பகுப்பாய்வுக்காகக் கொடுக்கப்பட்டது. இந்தப் பானங்களில் சக்கரின் கலக்கப்பட்டிருப்பதை (4-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கு எல்லைக் கிராமங்களில் பதற்றம்

# சிங்கள குடியேற்றவாசிகள் வெளியேற்றம்

## இடம்பெயர்வை தடுக்க அரசு முயற்சி

(கொழும்பு)

கிழக்கு மாகாண எல்லை கிராமங்களில் பெரும் பதற்றம் நிலவுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு - பொலநறுவ மாவட்டங்களின் எல்லையோரத்தில் இருந்து ஆயிரக்கணக்கான சிங்களக்குடியேற்றவாசிகள் இடம்பெயர்ந்துவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை இக் குடியேற்றவாசிகளின் வெளியேற்றத்தைத்தடுக்க அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்ட போதும் அந்தமுயற்சி வெற்றி அளிக்கவில்லை எனவும் தெரியவருகிறது.

இதுவரை 6,000க்கும் மேற்பட்ட சிங்களக் குடியேற்றவாசிகள் வெளியேறியுள்ளதாகவும், மேலும் ஆயிரக்கணக்கான குடியேற்றவாசிகள் வெளியேறலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. எல்லையோரங்களில் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என அஞ்சியே இக்கிராமவாசிகள் வெளியேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறாக வெளியேறும் மக்கள் தமது பாதுகாப்பை முன்னிட்டு விஜயபுர பாடசாலையிலும், தபுல்ல, துக்காலில போன்ற கிராமத்திலும் அரச கட்டடங்களிலும் தங்கி உள்ளனர்.

இதேவேளை அரசாங்கம் இக் கிராமங்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்குவதாக உறுதி அளித்த போதும் மக்கள் அதற்கு செவி சாய்த்ததாகத் தெரியவில்லை.

## கிழக்கு எல்லையில் புதிய பாதுகாப்பு திட்டம்

## கிராமவாசிகள் - ஆயுதப்படை இணைந்த பாதுகாப்பு வலயம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஒதுக்குப்புறமான சிங்கள, முஸ்லிம் கிராமங்களில் புதிய பாதுகாப்புத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஊர்காவற்படையினரும், கிராம மக்களும், பாதுகாப்புப் படைகளும் சேர்ந்தாற்போல் ஒன்றிணைக்கப்பட்ட பாதுகாப்பு

சிங்களக் கிராமங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஊர்காவல்படை மற்றும் பாதுகாப்புப்படைகளுடன் இணைந்து எல்லைப்புறப் பாதுகாப்பில் ஈடுபடுவதற்கென அந்தந்தப் பகுதிகளிலிருந்து பல இளைஞர்கள் தெரி


ணுவ முகாம்களில் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து பாதுகாப்புக்களில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### மாவீரர் குறிப்பேடு

விசேட இணைப்பாக மாவீரர் குறிப்பேடு இன்று முதல் வெளிவருகின்றது. உங்கள் குறிப்பேட்டை முகவர்களிடமிருந்து தவறாது கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

### பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுக்கொலை

(கொழும்பு)



கடந்த 18 ஆம் திகதி உயிலங்குளம் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலின் போது அவர்களால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையே படத்தில் காண்கின்றீர்கள் இத்தாக்குதலில் 10 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

## ஊட்டச்சத்து குறைந்த நிலையில்

வாசிகள் வெளியேறியுள்ள தாகவும், மேலும் ஆயிரக் செய்திகள் தெரிவிக்கின்றன. எல்லையோரங்களில் தாக்கு வெளியேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னிட்டு விஜயபுர பாடசாலையிலும், தபுல்ல, தக்காலில போன்ற கிராமத்திலும் அரச கட்டடங்களிலும் தங்கி உள்ளனர்.

இதேவேளை அரசாங்கம் இக் கிராமங்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்குவதாக உறுதி அளித்த போதும் மக்கள் அதற்கு செவி சாய்த்ததாகத் தெரியவில்லை.

### கிழக்கு எல்லையில் புதிய பாதுகாப்பு திட்டம்

# கிராமவாசிகள் - ஆயுதப்படை இணைந்த பாதுகாப்பு வலயம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஒதுக்குப்புறமான சிங்கள, முஸ்லிம் கிராமங்களில் புதிய பாதுகாப்புத் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது ஊர்காவற் படையினரும், கிராம மக்களும், பாதுகாப்புப் படைகளும் சேர்ந்தாற்போல் ஒன்றிணைக்கப்பட்ட பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தப் போவதாக இராணுவ தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இநதப் புதிய பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முஸ்லிம், சிங்களக் கிராமங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஊர் காவல்படை மற்றும் பாதுகாப்புப்படைகளுடன் இணைந்து எல்லைப்புறப் பாதுகாப்பில் ஈடுபடுவதற்கென அந்தந்தப் பகுதிகளிலிருந்து பல இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு இராணுவப் பயிற்சி அளிக்கப்படவுள்ளனர்

இவர்கள் ஒதுக்குப்புற கிராமங்கள் தோறும் புதிதாக அமைக்கப்படவுள்ள இராணுவ முகாம்களில் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து பாதுகாப்புக்களில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுக்கொலை

(கொழும்பு)

வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் சுப்பிரமணியம் இந்திரகுமார் கடந்த திங்களன்று மட்டக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மாவீரர் குறிப்பேடு

விசேட இணைப்பாக மாவீரர் குறிப்பேடு இன்று முதல் வெளிவருகின்றது. உங்கள் குறிப்பேட்டை முகவர்களிடமிருந்து தவறாது கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.



கடந்த 18 ஆம் திகதி உயிலங்குளம் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலின் போது அவர்களால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையே படத்தில் காண்கின்றீர்கள் இத்தாக்குதலில் 10 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

### கொழும்பு தபால்கள் இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

''குமண'' கப்பலில் எடுத்து வரப்பட்ட வெளியூர்த் தபால்கள் இன்று முதல் சகல இடங்களிற்கும் விநியோகிக்கப்பட இருக்கின்றது

நேற்று முன்தினம் பருத்தித்துறையை வந்தடைந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ஊட்டச்சத்து குறைந்த நிலையில் திருமலை அகதிமுகாம் சிறுவர்கள்

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் அகதி முகாம்களிலும், மீளக்குடியமர்த்தப்பட்ட இடங்களிலும் வாழும் ஐந்து வயதுக்குக் குறைந்த சிறார்கள் ஊட்டச்சத்து குறைந்தவர்களாக வளர்வதாக சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வொன்றிலிருந்து தெரிய வருகின்றது.

ஊட்டச் சத்துக் குறைவு ஆய்வு இங்கிலாந்து நிறுவனமான குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது

முன்பு திருக்கோணமலை மக்களுக்கு மீன் உணவு காய்கறி வகைகள் தானியங்கள் தாராளமாகக் கிடைத்தன. அதனால் அவர்களின் தேக நிலை மிகத் திருப்திகரமாக இருந்தது என திருக்கோணமலை பதில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஈ. ஜி. ஞானகுணாளனன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்றுள்ள சூழ் நிலையில் நிலைமை முற்றிலும் வேறு விதமாக மாறி முன்பு வசதியாக வாழ்ந்த மக்கள்கொழில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அஷ்ரப்பின் கோரிக்கை சுதந்திரக்கட்சியால் நிராகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்திருக்கும் கரிநாள் அழைப்பு ஒருதலைப்பட்சமானது. அதனால் செவிசாய்ப்பது சாத்தியமானதல்ல என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தொழிற்சங்கத் தலைவர் அலவி மௌலானா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; மற்றக் கட்சிகளுடனோ, தொழிற் சங்கங்களுடனோ கலந்து ஆலோசிக்காமல் அஷ்ரப் ஒருதலைப்பட்சமாக முடிவு எடுத்து கரிநாளுக்கான அழைப்பை விடுத்துள்ளார். அதனால் கரிநாளுக்கான அழைப்புக்கு நாம் செவிசாய்க்க வேண்டுமென அவர் எதிர்பார்க்க முடியாது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் கரிநாளுக்காக விடுத்த அழைப்பை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கரிநாளைக் கடைப்பிடிப்பதில்லை என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது.

# வடமராட்சியில் குண்டுவீச்சு; வீதியால் சென்ற இருவர் காயம்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் நேற்று நண்பகல் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் ஐந்து நடத்திய குண்டு வீச்சு தாக்குதலில் இருவர் காயமடைந்தனர். புறாப்பொறுக்கி, உப்பு றோட் பகுதியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பகல் 11-00 மணியளவில் அப்பகுதிக்கு வந்த ஒரு ஹெலிகொப்டரும் ஐந்து பொம்பர்களும் பல தடவைகள் வட்டமிட்டு விட்டு 3 பொம்பர்கள் உப்பு றோட் சந்தியில் மூன்று குண்டுகளை வீசின. புறாப் பொறுக்கி வல்லைச் சந்தியில் இரு விமானங்கள் குண்டுகளை வீசின.

வல்லைச் சந்தியில் வீசிய இரண்டு குண்டுகளுக்கு வீதியால் வந்த 45 வயதுடைய திரு. வை. துரைச்சாமி (கரவெட்டி கிழக்கு) திரு. சோ. ஞானசுந்தரம் (கரவெட்டி கிழக்கு) ஆகியோரே காயமடைந்தநிலையில் மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (82)

## முஸ்லிம் படைப்பிரிவால் எதையும் சாதிக்க முடியாது

### சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் தலைவர்

சிறிலங்காவில் முஸ்லிம்களுக்கென தனியான படைப்பிர்வு அமைப்பது மூலம் எதையும் சாதிக்க முடியாது என்று சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் தலைவர் அமீன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் ஒரு சிலர் கோருவது போல இனத்திற்கென படைப்பிரிவு அமைக்கப்படக் கூடாது அவ்வாறு அமைக்கப்படின் அழிவுகள் அதிகரிக்கும். அமைதி சீர்குலையும். எமது அமைப்பு எப்போதும்இனவாதக் கொள்கைகளுக்கும், இனவாதக் கட்சிகளுக்கும் எதிரானதே என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு தனிப்பட்டவர்களுக்கு ஆயுதம் வழங்கப்படுவதை நாம் வன்மையாக எதிர்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். இது இனக்குரோதங்களையும், பகைமையையும் மேலும் வளர்க்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## நான் பதவியை ஒருபோதும் ராஜினாமாசெய்யமாட்டேன்

\- அஷ்ரப்

(கொழும்பு)

எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்யப் போவதில்லை. நான் ராஜினாமாச் செய்தால் பாராளுமன்றத்தில் ஒரு சமூகத்தின் 'குரல்' அடங்கி விடும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் தெரிவித்தார்.

பொலநறுவைக் கொலை குறித்து ஆடசேபம் தெரிவிக்கும் வகையில் ஒரு முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றஉறுப்பினர் ராஜினாமா செய்வது பற்றிக் கட்சி தீவிரமாகஆலோசித்து வருகிறது என்று அஷ்ரப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

பலர் எனது ராஜினாமாவை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மீனவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவரின்மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

நேற்று நண்பகல் மேற்படி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மூளாய், பொன்னாலை மீது எறிகணைத் தாக்கு

காரைநகரில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 40 தமிழ் இளைஞர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் அண்மைக் காலத்தில் மட்டும் தமிழிளைஞர்கள் சுமார் நாற்பது பேர் வரையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பெரும் பாலோர் வட பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாகரை, மாங்கேணி, உன்னிச்சை இராணுவ முகாம்கள் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

வாகரை, மாங்கேணி, உன்னிச்சை ஆகிய இடங்களில் இயங்கிய மூன்று இராணுவ முகாம்களுமே மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகரை, மாங்கேணி ஆகிய படை முகாம்கள் வாழைச்சேனைக்கும், திருமலைக்கும் இடையேயான பாதையில் காடு சார்ந்த பிரதேசத்தில் இயங்கிவந்தன. உன்னிச்சை இராணுவமுகாம் மட்டக்களப்புக்கு மேற்கே படுவான்கரை பகுதியில் இயங்கிவந்தது குறிப்பிடத்தக்கது.

**சுத்தக் காற்று சுற்றிலும் நிலவிட நித்தம் ஒரு மரம் நடுவோம்**

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப் படும். டில்காவாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமையில்) கூல்பார் யாழ்ப்பாணம். (சி-5150)

### மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ளலும்'' உளவியல் சஞ்சிகை தனிப் பிரதி - ரூபா 12.00 தேவையானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். முகவரி ஜோ. எக்கட்டன் 19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை- சுண்டிக்குளி சபாசிசிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி125-)

### ஜெயா அழகு சாதன மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சி கூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177-A மின்சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (சி-5250)

### தையல் இயந்திரங்கள்

தீபாவளியை முன்னிட்டுச் சகலவிதமான தையல் இயந்திரங்களையும், உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும், பழுதடைந்த சகலவிதமான தையல் இயந்திரங்களையும் உடனுக்குடன் எமது நிலையத்திலும், உங்கள் வீடுகளிலும் வைத்துத் திருத்திக் கொள்ளவும், உங்கள் தையல் இயந்திரங்களை விற்றுக் கொள்ளவும், நாடுங்கள். தையல் இயந்திர நிலையம் கண்டி வீதி, சாவகச்சேரி

(சி-5232)

### பற்சிகிச்சை

பற் சிகிச்சை நிலையம் (கொக்குவில்- இந்துக் கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ் வீதி. கொக்குவில் பா. நே தினசரி பி. ப. 4 00 - பி.ப. 6 00 மணி வரை ஞாயிறு

# 'லயன்களை' தொழிலாளருக்கு சொந்தமாக்க முடிவாம்

(கொழும்பு)

பெருந்தோட்டத் துறையில் இருக்கும் தொழிலாளர் குடியிருப்புக்களான லயன் அறைகளையும், அதனைச் சுற்றியுள்ள பயிர்ச்செய்கைக் காணிகளையும் தோட்டத் தொழிலாளருக்கு சொந்தமாக்கிவிட ஜனாதிபதி பிரேமதாசா முடிவு செய்துள்ளார்.

கூட்டுறவு அமைப்புக்களை ஏற்படுத்தி அவற்றின் மேற்பார்வையில் இக் காணிகளைப் பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

இத் தகவல்களை ஊவா மாகாணத்தில் தோட்டப் பெண்களின் கூட்டமொன்றில் பேசும்போது கைத்தொழில் விஞ்ஞான இராஜாங்க அமைச்சரும். அமைச்சரவைப் பேச்சாளருமான ரணில் விக்கிரமசிங்கா வெளியிட்டார்.

அவர் அங்கு கூறுகையில்; மேலும். தோட்டத் தொழிலாளரின் வீடமைப்புக்காக நிதியம் ஒன்று ஏற்படுத்தப்படுமென்றும். இதற்கான நிதி திறைசேரியிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பெறப்படும் என்றும் தெரிவித்தார்.

# விபத்தில் இராணுவம் பலி

(மாத்தறை)

சிறிலங்கா இராணுவ பொறியியலாளர் பிரிவில் கடமையாற்றும் இராணுவ சிப்பாய் ஒருவர் மோட்டார் சைக்கிள் அம்புலன்ஸ் வண்டி மோதலில் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து கொட்டவாய என்ற இடத்தில் கடந்தஞாயிறன்று நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரசாங்க அறிவித்தல்

20-10-92 இல் பரிசாரகர் பயிற்சியை முடித்த சுகாதார திணைக்கள ஊழியர்களிற்கு பின்வரும் திகதிகளில் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் பரீட்சை நடைபெறும். சம்பந்தப்பட்டவர்கள் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

25 10-92 காலை 8.00 மணி - எழுத்துப் பரீட்சை

26-10-92 )
27-10-92 ) செய்முறைப்பரீட்சை

சுகாதாரசேவைகள், பிராந்திய பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி சு. சே. பிராந்தியப்பணிப்பாளர்

(சி 5275)

யாழ். பல்கலைக் கழகத்திற்கு

# 30 இலட்சம் பெறுமதியான கணனிகள் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ் பல்கலைக்கழக கணனிப் பிரிவுக்குச் சுமார் முப்பது லட்சம் ரூபா பெறுமதியான கணனிகள் கிடைக்கவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு விட்டது. மிக விரைவில் கணனிகள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட உள்ளன. (க)

# சொற்களுக்குள்ள சக்தி காலங்காலமாய் நிலைக்கும்

-அருட்திரு சா. ம. செல்வரட்ணம்

(யாழ்ப்பாணம்)

''கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்'' என்பன போன்ற தமிழ் மொழியின் பழைய கூற்றுக்கள் ரத்துச்செய்யப்பட வேண்டும். இத்தகைய கூற்றுக்கள் இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும் பொருத்தப்பாடு உடையவை அல்ல.

இவ்வாறு அருட்திரு சா. ம. செல்வரட்ணம் கவிஞர் நாவண்ணனின் கதை கண்ணீர்க் கவிதை நூலின் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை வழங்கும்போது குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் பேசுகையில் சொற்களுக்கு சக்தி உண்டு. அவை காலம் காலமாக நிலைத்து மக்களின் மனநிலையில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்றும் குறிப்பிட்டார். உளவியல் அடிப்படையில் கதை—கண்ணீர்—கவிதை நூலினால் ஆய்வு செய்த அவர் கைக்கு அடக்கமான சிறு நூலில் மலையக மக்களின் மொத்த வரலாற்றையும் சித்தரித்துவிட்ட கவிஞர் நாவண்ணனின் திறமையைப் பாராட்டினார்,

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் கம்பன் கோட்ட மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் வரவேற்புரையை கம்பன்கழக அமைப்பாளர் இ ஜெயராஜ் நிகழ்த்த கவிஞர் சோ பத்மநாதன் மற்றும் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை ஆய்வுரையை நிகழ்த்தினார். விழாவின் இறுதியில் கதை—கண்ணீர்—கவிதை நூலின் முதற் பிரதியை வித்துவான் க. சைப்பிள்ளை வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ஜெபநேசன் பெற்றுக்கொள்ள நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# அரச வைத்தியசாலைகளில் சேமநல சபைகள்

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளுக்கு பாடசாலை அபிவிருத்திச்சபைகள்போல் சேமநலச் சபைகள் நிறுவப்படவுள்ளது'

இந்தச் சபைகள் ஆஸ்பத்திரிகளில் இடம்பெறும் ஊழல் வீண் விரயங்களைத் தவிர்ப்பதோடு நிதியைச் செயற்படுத்தும் முறையிலும் உதவும் எனத் தெரிவிககப்படுகிறது.

# கால்நடைகளை கட்டுப்படுத்தவும்

(யாழ்ப்பாணம்)

கால போகத்துக்கான நெற்செய்கை ஆரம்பமாகி விட்டதால் கட்டாக்காலி ஆடு மாடுகளை கட்டி வளர்க்குமாறு கால் நடை வளர்ப்போருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கட்டவிழ்த்து விடப்படும் கால்நடைகளின் சொந்தக்காரர் மீது குற்றப் பணம் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில், சங்குவேலி, மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை பகுதிகளில் உள்ள கிராம சேவையாளரின் கீழ் இயங்கும் உற்பத்திக் குழுக்கள் மூலம் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கலைப்பீடம்

1991 / 92 கல்வியாண்டிற்குத் தெரிவானகலைப்பீட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் 1992 நவம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாகும் எனபதை அறியத் தருகிறோம்.

### சித்தமருத்துவம்

சித்த மருத்துவத்திற்குத் தெரிவான புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1992 நவம்பர் 2 ஆம் திகதியும், முதலாம் வருடம்உட்பட சகல மாணவர்களுக்கான விரிவுரைகள் 11நவம்பர் 92இல் ஆரம்பமாகும் என்பதையும் அறியத் தருகிறோம்,

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வெளிவாரிக் கற்கைநெறிப் பதிவுகள் 1991/1992 கல்வியாண்டு

யாழ்ப்பாணம் / வெளிவாரிக் கற்கை நெறிகளான கலைமுதல், வர்த்தகமதல் வர்த்தகமாணி பகுதி 1, பொதுக்கலைமாணிபகுதி 1, சிறப்புக்கலைமாணிபகுதி1,

# குடிநீர்த் திட்டம்

நாயன்மார்கட்டு பகுதிக்கான குடிநீர் விநியோகத் திட்டமும், அரியாலை மேற்குக் குடிநீர்த் திட்டமும் இன்று மாலை நான்கு மணியளவில் யாழ். மாநகர சபையினரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது

யுனிசெப் உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபையால் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்த ஆறு குடிநீர்

தொழில்நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம்

# 1993-ம் கல்வியாண்டிற்கான மாணவர் அனுமதி

எமது கல்லூரியில் 1993 ஆம் கல்வியாண்டுப்பயிற்சி நெறிகளுக்கு மாணவர் அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள் 21-11-1992 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென அறியத்தருகிறேன்.

தொழில்நுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
1992-10-21

அதிபர்

(சி-5272)

# நினைவு கூருகின்றோம்...

## 1992-10-22

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் கொழும்புதுறைமுகம் பகுதியில், சிறிலங்காப் பொலிசாருக்குக் குண்டு வைக்க முயல்கையில் தவறுதலாகக் குண்டு வெடித்ததில் வீரச்சாவெய்திய -

★ **பரி / அமுதன்** (இரத்தினசபாபதி பரிபூரணன் கரம்பொன், ஊர்காவற்றுறை தீவகம் யாழ்.)

1986ஆம் ஆண்டு. அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

**விஜி/பாவலதேவன்** (சுந்தரம்பிள்ளைமரியரட்ணம் முருங்கன்பிட்டி - மன்னார்)

1987 ஆம் ஆண்டு அராலியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலின் போது கொல்லப்பட்ட 29 தமிழர்கள்.

அச்சுவேலி, சுண்டுக்குளிப் பகுதிகளில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளியைச் சேர்ந்த தாய், தந்தை, மகன் உட்பட 5 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு மட்டக்களப்பு குருக்கள் மடம் பகுதியில் தேசவிரோதிகள் வெட்டியதில் வீரச்சாவெய்திய -

**சின்னத்தம்பி** (சதாசிவம் சகாயராசா தாழங்குடா, காத்தான்குடி மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில், தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட -

நாட்டுப்பற்றாளரான -

## தையல் இயந்திரங்கள்

தீபாவளியை முன்னிட்டுச் சகலவிதமான தையல் இயந்திரங்களையும், உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும், பழுதடைந்த சகலவிதமான தையல் இயந்திரங்களையும் உடனுக்கு உடன் எமது நிலையத்திலும், உங்கள் வீடுகளிலும் வைத்துத் திருத்திக் கொள்ளவும், உங்கள் தையல் இயந்திரங்களை விற்றுக் கொள்ளவும், நாடுங்கள். தையல் இயந்திர நிலையம் கண்டி வீதி, சாவகச்சேரி

(சி-5232)

### பற்சிகிச்சை

பற் சிகிச்சை நிலையம் (கொக்குவில்- இந்துக் கல்லூரிக்கு எதிரில்) கே கே. எஸ் வீதி. கொக்குவில் பா. நே தினசரி பி. ப. 4 00 - பி.ப. 6 00 மணி வரை ஞாயிறு மு. ப.10.00-பி. ப. 2.00 மணி வரை. (சி-3211)

### மலிவு விற்பனை

தீபாவளித் திருநாளை முன்னிட்டு றெடிமேற் ஸ்கேட், பிளவுஸ்,சிங்கப்பூர் கவுண்கள், சூட்டிங் சேட்டிங் வகைகள் இன்று தொடக்கம் 25-10-92 வரை மலிவு விலையில் கிடைக்கும், தவற விடாதீர்கள். துர்க்கா ரெக்ஸ் 164, நவீன சந்தை உட்புறம் யழ்ப் பாணம். (சி-5251)

### வெற்றுப் பைக்கற்

கோழித்தீன் வெற்றுப் பக்கற் வாங்குகிறோம். — மில்க் வைற். (சி/5271)

## எறிகணை வீச்சு

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று காலை 11-00 மணியளவில் சுமார் 5 எறிகணைகள் ஏவப்பட்டன. இவை ஏழாலை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

## கலைப்பீடம்

1991 / 92 கல்வியாண்டிற்குத் தெரிவானகலைப்பீட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் 1992 நவம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகிறோம்.

### சித்தமருத்துவம்

சித்த மருத்துவத்திற்குத் தெரிவான புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1992 நவம்பர் 2 ஆம் திகதியும், முதலாம் வருடம்உட்பட சகல மாணவர்களுக்கான விரிவுரைகள் 11நவம்பர் 92இல் ஆரம்பமாகும் என்பதையும் அறியத் தருகிறோம்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக் கழகம்
20. 10. 1992

[சி-5270]

### ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில்மண்ணெண்ணை வெற்றுப் பீப்பாக்கள் 26 10.1992 திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்கு பல்கலைக் கழக களஞ்சிய சாலைக்கு அருகாமையில் வைத்து ஏலத்தில் விற்கப் படும்

ஏலத்தில் வெற்றி பெறுபவர் உரிய முழுத் தொகையையும் உடனடியாக பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பீப்பாக்கள்முழுவதையம் அன்று பிற்பகல் 4.00 மணிக்கு முன்னதாக பல்கலைக்கழகத்தில் இருந்து அப்புறப் படுத்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்லைக் கழகம்,
திருநெல்வேலி.
1992.10.20 சி-5274

## பிரதேச செய்தியாளர் தேவை

தென்மராட்சிப் பகுதிக்கான பிரதேச செய்தியாளர் பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படவுள்ளது.இதில் கடமை புரிய விரும்புவோர் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் சனிக்கிழமை [24-10-92] எமது காரியாலயத்திற்கு நேரில் சமுகமளிக்கவும்.

பளை எழுதுமட்டுவாள் பகுதிகளில் வசிப்போருக்கும், முன் அனுபவமுள்ள செய்தியாளர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

— ஆசிரியர்

கால்நடைகளின் சொந்தக்காரர் மீது குற்றப் பணம் அறமூலம் இவ்வாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிக் கற்கைநெறிப் பதிவுகள் 1991/1992 கல்வியாண்டு

யாழ்ப்பாணம் / வெளிவாரிக் கற்கை நெறிகளான கலைமுதல், வர்த்தகமதல் வர்த்தகமாணி பகுதி 1, பொதுக்கலைமாணிபகுதி 1, சிறப்புக்கலைமாணிபகுதி1, ஆகியவற்றிற்குப் பதிவு செய்த மாணவர்கள் தங்கள் பதிவுக்கான கடிதத்தை வெளிவாரிப் பகுதியில் 21 10. 1992 முதல் பெற்றுக் கொள்ளும்படி வேண்டப் படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் தலைமையில் பின்வரும் முறையில் பிரவேச வரவேற்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அமர்வு I 24.10. 1992 (சனிக்சிழமை) பி.ப. 2.00மணி புதியமாணவர்கள். (கலை/வர்த்தகம்)

அமர்வு II 24.10.1992 [சனிக்கிழமை] பி.ப 3.00 மணி இரண்டாம் வருட மாணவர்கள் [கலை / வர்த்தகம்]

பதிவு பெற்ற அனைத்து மாணவர்களும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
யாழ்ப்பாணம்.

[சி/5269]

UNIVERSITY OF JAFFNA

## EXTERNAL REGISTRATION 1991/92

Admission and Welcome of
Freshers and Sophomore (External Students) –1991/92

Admission and welcome of external students will take place in two sessions under the patronage of the Vice-Chancellor in Kailasapathy Auditorium

Session I - 24-10 92 (Saturday) at 2,00 P.M. for Freshers First in Arts Commerce

Session II - 24-10-92 (Saturday) at 3.00 P. M for Sophomore Bachelor of Arts Genral Part 1 Bachelor of Commerce Part 1

Please collect your provisional registration letter from 22nd onwords from the External Examination Unit.

University of Jaffna (சி-5268) Registrar

கன்னை நூலின் முதற் பிரதியை வித்துவான் சூசைப் பிள்ளை வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ஜெயநேசன் பெற்றுக்கொள்ள நூல் வெளியிட்டு வைக்கப் பட்டது.

## குடிநீர்த் திட்டம்

நாயன்மார்கட்டு பகுதிக்கான குடிநீர் விநியோகத் திட்டமும், அரியாலை மேற்குக் குடிநீர்த் திட்டமும் இன்று மாலை நான்கு மணியளவில் யாழ். மாநகர சபையினரால் ஆரபபித்து வைக்கப்படவுள்ளது

யுனிசெப் உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபையால் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்த ஆறு குடிநீர் விநியோகத் திட்டங்கள் மின்தடையால் இரு ஆண்டுகளாகச் செயலிழந்திருப்பது தெரிந்ததே தற்போது மண்ணெயில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரம் மூலமாக யமுனா வீதி குடிநீர் விநியோகதிட்டமும், அரியாலை கிழக்குக் குடிநீர் விநியோகத் திட்டமும் ஏற்கனவே இயங்க, வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

இன்று ஆரம்பித்து வைக்கப் பட இருக்கும் குடிநீர்த் திட்டங்களைத் தொடர்ந்து பொம்மைவெளி குடிநீர் விநியோகத் திட்டமும், கொழும்புத்துறை குடிநீர் விநியோகத் திட்டமும், வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது

### குடும்ப அட்டைக்கு சீனி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ சீனியும், அரை லீற்றர் மண்ணெண்ணையும் வழங்கப்படுகின்றன.

மொத்தம் 46 ப. நோ. கூ. சங்கக் கிளைகளைச் சேர்ந்த 26,000 அட்டைகளுக்கு விநியோகிக்க 20,000 கிலோ சீனி யாழ். செயலகம் புனர்வாழ்வுக் கிளையினால் வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது இதனால் குடும்ப அங்கத்தினரின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் சீனியைக் கூடுதலாக வழங்க முடியாதிருப்பதாகக் கிளை முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அரியாலை, பெரியகடை, சுண்டிக்குளி வர்த்தக திணைக்களங்களில் ஒரு கிலோ சீனி ரூபா 27-75 சதத்திற்கு எவரும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது இந்தச் சீனியைச் சிலர் பல தரங்கள் பெற்று கூடுதல் விலைக்கு விற்பதாகப் பாவனையாளர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

தில் வீரச்சாவெய்திய -

★ **பரி / அமுதன்** (இரத்தினசபாபதி பரிபூரணன் கரம்பொன், ஊர்காவற்றுறை தீவகம் யாழ்.)

1986ஆம் ஆண்டு. அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

**விஜி/பாவலதேவன்** (சுந்தரம்பிள்ளைமரியரட்ணம் முருங்கன்பிட்டி - மன்னார்)

1987 ஆம் ஆண்டு அராலியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலின் போது கொல்லப்பட்ட 29 தமிழர்கள்.

அச்சுவேலி, சுண்டுக்குளிப் பகுதிகளில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளியைச் சேர்ந்த தாய், தந்தை, மகன் உட்பட 5 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு மட்டக்களப்பு குருக்கள் மடம் பகுதியில் தேசவிரோதிகள் வெட்டியதில் வீரச்சாவெய்திய -

**சின்னத்தம்பி** (சதாசிவம் சகாயராசா தாழங்குடா, காத்தான்குடி மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில், தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட -

நாட்டுப்பற்றாளரான -

கிற்றார் இசைக்கலைஞர் -

**செல்லையா கிளேற்றன்** (18/3, மடம் வீதி யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொன்னாச்சி கடைச்சந்தியில், இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம் தம்பதியினர்.

1989 ஆம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**ஸ்ரிபன்|திலீபன்** (மதியழகன்காங்கேசன்துறை-யாழ்)

தரவைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லக்ஸ்மன்** (கா. மனோகரன் - சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை மட்டக்களப்பு)

1990ஆம் ஆண்டு பலாலி முகாம் சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**ஜெயா** (லதா கனகராசா- வன்னிச்சி அம்மன்கோயிலடி, வல்வெட்டித்துறை - யாழ்.)

**மதுபாலன்** (இரத்தினம் இராஜேந்திரன் - காட்டுப் புலம், வல்வெட்டித்துறை - யாழ்.)

**ராஜ்சேகர்** (நடராசா விக்னேஸ்வரன் - 6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி - திருக்கோணமலை)

**கிலீப்** (சண்முகராசா சிறிதரன் - சுன்னாகம் - யாழ்.)

**கபிலன்**

சுட்டுவன் பகுதியில், சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

**நிர்மலன்** (தியாகராஜா ரஜீவன் - கோப்பாய்- யாழ்.)

காங்கேசன்துறை திஸ்ஸவிகாரை முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மகேசன்** (வல்லிபுரம் இராமச்சந்திரன் - தவசிக்குளம், மிருசுவில் - யாழ் )

தீவகம் - இறுப்பிட்டிக் கடற்பகுதியில், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் கரையொதுங்கிய தமிழ்ப் பொது மகன்,

1991ஆம் ஆண்டு கீரிமலைப்பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**வாசன்** (பரமலிங்கம் யசோதரன் - மானிப்பாய் - யாழ்.)

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் பரி] அமுதன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

[சி-5266]

சிந்தனைக்கு

எதைச் செய்தாலும் முடிவை எண்ணிப் பார்த்துச் செய்ய வேண்டும்.

- லத்தீன் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 22-10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# எதிர்க்கட்சிகளின் கூட்டு

அவசரகால சட்டவிதிகளில் இன்னமும் நீக்கப்படாமல் அமுலில் இருக்கும் கடுமையான விதிகள் சிலவற்றை நீக்கக்கோரி எதிர்வரும் 26ஆம் திகதி 13 எதிர்க்கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றையும் ஊர்வலத்தின் முடிவில் பொதுக் கூட்டம் ஒன்றையும் நடத்தத் தீர்மானித்துள்ளன.

இதேவேளை இவ் எதிர்க்கட்சிகள் யாவும் இணைந்து ஒரு பொது முன்னணி ஆரம்பிப்பதற்கான யாப்பு ஒன்றை சிறிலங்கா சுதந்திரக்கட்சி இவ் எதிர்க்கட்சிதலைவர்களிடம் ஒப்படைத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக ஆட்சி செய்யும் முறையை இலங்கையில் முதலில் அறிமுகமாக்கிய பெருமை சிறிலங்கா சுதந்திரக்கட்சியையே சாரும். இவ் அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி தனது ஆட்சி அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொண்டதிலும், ஆட்சிக் காலத்தை நீடித்துக் கொண்டதிலும் ஐக்கியதேசியக்கட்சிக்கு சற்றும் குறைந்ததல்ல சிறிலங்கா சுதந்திரக்கட்சி. இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அவசரகாலச் சட்டத்தை நீக்கக்கோரிப் போராட்டம் நடத்துவதென்பது எந்தளவிற்கு தார்மீக ஆதரவுள்ள விடயம் என்பது ஒரு புறம் இருக்க, எதிர்க்கட்சியினரின் இக்கோரிக்கையை சிறிலங்கா ஜனாதிபதி எந்தளவுக்கு ஏற்றுக் கொள்வார், பரிசீலனைக்குஎடுத்துக்கொள்வார் என்பது கேள்விக் குரியதேயாகும்.

மேலும் எதிர்க்கட்சியினரால் எந்தளவிற்கு தமது பலத்தை காட்ட முடியும் என்பதும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்மீதோ, அன்றி லலித்-காமினி ஆகியோருடைய ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி மீதோ எந்தளவிற்கு நம்பிக்கை வைத்து மக்கள் அணிதிரளுவார்கள் என்பதும் சந்தேகத்திற்குரிய ஒன்றே. ஏனெனில் சிங்கள மக்களுக்கு இவ் எதிர்க்கட்சிகள் எவையும் ஒற்றுமையானவையாகவோ நம்பிக்கைஅளிக்கக்கூடியவையா

# வவுனியாவில் ஆடைத் தொழிலகம் சிங். இளைஞருக்கு வேலை வாய்ப்பு

(வவுனியா)

அதிக சிங்கள இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் நோக்குடன் திட்டமிடப்பட்டு தமிழர் செல்ல அஞ்சும் பகுதிகளில் ஆடைத் தொழிற்சாலைகள் இரண்டை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஈரற்பெரியகுளம் பகுதியிலும், வவுனியா — கண்டி வீதியில் உள்ள மூன்று முறிப்பு பகுதியிலும் இந்தஇரு ஆடைத் தொழிற்சாலைகளும் அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மக்களின் நடமாட்டம் அதிகமுள்ள இப் பகுதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ள இத் தொழிற்சாலைக்கு தமிழ் இளைஞர்களிடமிருந்து வேலைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள போதிலும் சிங்கள இளைஞர், யுவதிகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாம்.

ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் நகரப் பகுதியில் மிகக் குறைந்தளவிலான தமிழ் இளைஞர்களே விண்ணப்பித்துள்ளனர்

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் இராணுவ அச்சம் காரணமாக இந்த வேலை வாய்ப்பை நிராகரித்துள்ளனர்.

இந்த ஆடைத் தொழிற்சாலை எதிர்வரும் 28ஆம் திகதி ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## தமிழகத்தில் இருந்துவந்த மக்கள்

# உணவுப்பொருள்கள் இன்றி வவுனியாவில் அவதி

(வவுனியா)

தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பி வந்த அகதி மக்களுக்கு நிவாரணப் பொருள் மற்றும் உதவிப் பணம் வழங்குவதில் சிறிலங்கா அரசாங்கம் தாமதம் காட்டி வருவதனால் வவுனியா அகதி முகாம்களில் வசிக்கும் நாடு திரும்பிய அகதி மக்கள் பெரும் கஷ்ரத்தை அனுபவித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா - தாண்டிக்குளம் வேப்பங்குளம் பகுதிகளில் தங்கியுள்ள இந்த அகதி மக்கள் உணவுப் பொருள் கிடைக்காமையினாலும் உதவிப் பணம் கிடைக்காமையினாலும் துயரடைந்துள்ளனர்.

முகாம்களில் சன நெருக்கம் அதிகரித்திருப்பதனால் சுகாதார சீர்கேடும் நிலவுகின்றது என்று கூறப்பட்டது. (தி)

# விஞ்ஞான அறிவு வளர இப் படைப்பு உதவும்

-அ. பஞ்சலிங்கம்

(யாழ்ப்பாணம்)

பாடப்புத்தகங்களுக்கு வெளியே பரவலான முறையில் விஞ்ஞான அறிவைப் பெறுவதற்குரிய நூல்கள் தமிழ் மொழியில் குறைவு. ஏன் இல்லையென்றே கூறலாம். அவ் வகையில் அநு வை.நாகராஜனின் தேடலும் பதித்தலும் நூல் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகும் என்று யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் குறிப்பிட்டார்.

இந்துக் கல்லூரியில் குமாரசுவாமி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த அநு. வை. நாகராஜனின் ''தேடலும் பதித்தலும்'' நூல் வெளியீட்டு விழாவிற்கு அவர் தலைமை வகித்து மேலும் பேசுகையில், ஐன்ஸ்டன், நியூட்டன் போன்ற பெரும் விஞ்ஞானிகளின் வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்கள் பரவலாகஅறியப்படுவதன் ஊடாகபுதியகண்டுபிடிப்புகளுக்கு வித்திடப்படலாம்என்றும் குறிப்பிட்டார்.

மூத்த எழுத்தாளரான தி. ச. வரதர், சமூக சேவையாளர் சிவமகாராஜா ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைக்க திருமதி நாகராஜனின் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமான இந் நிகழ்ச்சியில் நா. க. சண்முகநாதபிள்ளை, ஏ. ரி. பொன்னுத்துரை. வேலாயுதம், சிவானந்தன், திருமதி கோகிலா மகேந்திரன் உட்படபலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## சந்திப்பு

வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தின் மேஜர் மோகன் கலைக்கூடத்தில் எழுத்தாளர்கள், கலைஞர்களுடனான சந்திப்பு இன்று பிற்பகல் 2-00 மணிக்கு வடமராட்சி கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு பாஸ்கரன் தலைமையில் நடைபெறும்.

# வவுனியாரயில்நிலையத்தில் காடையர் அட்டகாசம்

(வவுனியா)

வவுனியா ரயில் நிலையத்தில் காடையர் தொல்லை அதிகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா அரசியல்வாதி ஒருவரின் செல்வாக்கைப் பயன்படுத்தி ஒருவர் அங்கு வரும் பயணிகளிடம் காடைத்தனத்தில் ஈடுபட்டுவருகிறார்.

இவர் பிரயாணிகளை மட்டுமல்ல ரயில் நிலைய அதிபரையும் தாக்கியுள்ளார். இவரின் மரியாதையற்ற செயல்களைத் தட்டிக் கேட்பார் எவருமில்லையா என பிரயாணிகள் கேட்கின்றனர்.

# தென்பகுதி பல்கலையில் பதிவு செய்வதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதிப் பல்கலைக்கழகங்களின் புதிய கல்வி ஆண்டிற்கு மாணவர்களைப் பதிவு செய்வதற்கான முடிவுத்திகதி கடந்த மாதம் 30-ம் திகதி ஆகும். இதனால் மேற்படி பல்கலைக்கழகங்களில் கற்கை நெறியைத் தொடரவுள்ள மாணவர்கள் தமது பதிவுகளைச் செய்வதில் காலதாமதம் தோன்றியுள்ளது. இம்மாணவர்களுக்கான அனுமதி தொடர்பான கடிதங்கள் காலதாமதமாக கிடைத்தமையால் மேற்படி நிலை தோன்றியுள்ளது இதனால் இம்மாணவர்களது பதிவுகளை ஏற்றுக் கொள்வதற்கான கால எல்லையை நீடிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. இக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## அறிவுப்போட்டி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவும், வடமாநில புற்றுநோய்ச் சங்கமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக் கிடையேயான புற்றுநோய் பற்றிய அறிவுப் போட்டி ஒன்றினை நடாத்த உள்ளது.

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்குபற்றக் கூடிய இப்போட்டியில் பங்கு பெறுவதற்கு இம்மாதம் முப்பத்தோராம் திகதிக்கு முன்பாக பாடசாலை அதிபர்களுக்கூடாக, விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

# கடுமையான பொருளாதார முறையை பின்பற்றவும்

-சிறிமா வற்புறுத்து

[கொழும்பு]

செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் கடுமையான பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவும் நாட்டை ஒரு யுத்தகால நிலைமையில்வைத்திருக்குமாறு எதிர்க்கட்சித் தலைவியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது அரசாங்கம் முன்னர் கடைப்பிடித்தது போல சகல மட்டங்களிலும் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் சகல விதமான கேளிக்கைகளுக்காகவும் செலவிடப்படும் ஊதாரித்தனமான செலவுகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன் மூலம் சேமிக்கப்படும் பணத்தை கிழக்கு வடமத்திய மாகாணங்களிலுள்ள எல்லைக் கிராமங்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

அரசாங்கம் ஒரு உதாரணமாகத் திகழ்ந்தால், நாட்டு மக்கள் எந்த ஒரு தியாகத்தையும் செய்வதற்கு தயாராகவுள்ளனர் எனவும் அவர்இந்த அறிக்கையில் மேலும்தெரிவித்துள்ளார்.

# அணுவாயுத உற்பத்தியினை பாகிஸ்தான் கைவிட வேண்டும்

- அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து

# வழக்கறிஞர்கள் அதிகரிப்பு சிங்கப்பூர் பிரதமர் கவலை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் புதிய வழக்கறிஞர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆராய அட்டோர்னி ஜெனரல் தலைமையில் குழு ஒன்று

போன்ற காட்சி என் மனதில் தென்படுகின்றது'' என சிங்கப்பூர் வழக்கறிஞர் சங்கத்தில் பேசிய பிரதமர் குறிப்பிட்டார்.

போதுமான சட்ட அலுவல்

ரத்தைப் பலப்படுத்திக் கொண்டதிலும், ஆட்சிக் காலத்தை நீடித்துக் கொண்டதிலும் ஐக்கியதேசி யக்கட்சிக்கு சற்றும் குறைந்ததல்ல சிறிலங்கா சுதந்திரக்கட்சி. இந்நிலையில் சிறிலங்கா சுதந்தி ரக்கட்சி அவசரகாலச் சட்டத்தை நீக்கக்கோரிப் போராட்டம் நடத்துவதென்பது எந்தளவிற்கு தார்மீக ஆதரவுள்ள விடயம் என்பது ஒரு புறம் இருக்க, எதிர்க்கட்சியினரின் இக்கோரிக்கையை சிறிலங்கா ஜனாதிபதி எந்தளவுக்கு ஏற்றுக் கொள் வார், பரிசீலனைக்குஎடுத்துக்கொள்வார் என்பது கேள்விக் குரியதேயாகும்.

மேலும் எதிர்க்கட்சியினரால் எந்தளவிற்கு தமது பலத்தை காட்ட முடியும் என்பதும், சிறி லங்கா சுதந்திரக்கட்சியின்மீதோ, அன்றி லலித்-காமினி ஆகியோருடைய ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி மீதோ எந்தளவிற்கு நம்பிக்கை வைத்து மக்கள் அணிதிரளுவார்கள் என்பதும் சந்தேகத்திற்குரிய ஒன்றே. ஏனெனில் சிங்கள மக்களுக்கு இவ் எதிர்க்கட்சிகள் எவையும் ஒற்றுமை யானவையாகவோ நம்பிக்கைஅளிக்கக்கூடியவையா கவோ இல்லை என்பதே முக்கியமானவிடயமாகும்.

முக்கிய எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந் திரக்கட்சி குடும்பத் தகராற்றின் காரணமாகவும் கொள்கை ரீதியிலும் சிதறுண்டு போய்ள்ளது. பண்டாரநாயக்கா குடும்பம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றப் போடும் போட்டியானது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடிமட்டத் தொண்டர்களை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர்கள் சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஆத ரிப்பதா? அல்லது அனுரா பண்டாரநாயக் காவை ஆதரிப்பதா? அல்லது சந்திரிகா குமா ரணதுங்காவை ஆதரிப்பதா? என்ற குழப்பத் தில் மூழ்கியுள்ளார்கள்.

இதேவேளை, சுதந்திரக்கட்சியின் தலைமை யில் வெறுப்படைந்த ஒரு பகுதியினர் 'ஹெல உறு மய' என்ற அமைப்பின் ஊடாக சுதந்திரக்கட்சி யின் கொள்கையைக் கண்டிப்பதோடு பேரின வாதப் போக்கினையும் கடைப்பிடிக்குமாறும் கட் சியை வற்புறுத்தி வருகின்றனர். மேலும் ஒரு பிரி வினர் கட்சியின் தலைமைக்கு நடக்கும் போட்டிக் குள் தாங்கள் எப்பக்கமும் சார்வதில்லை என்ற முடிவுடன், புதியதாக 'ஜன உறுமய' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இவ்வாறாக பல அணிகளாகவும், பல அமைப் புக்களாகவும் சுதந்திரக்கட்சி பிளவுபட்டுள்ளது போன்றே அடுத்த பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியி லும் முன்னணித் தலைவர்களான லலித், காமினி, பிரேமச்சந்திரா ஆகியோருக்கிடையில் தலைமைத் துவத்திற்கான சச்சரவுகள் நிலவுவதும், போட் டியுணர்வுடன் செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது

இந்நிலையில் அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டத்தை நடத்தவும், பொது முன்னணி அமைக்க முன்வந்திருப்பதும் எந்தளவிற்கு சாத் தியமான தென்பதும் மக்கள் மத்தியில் நம்பிக்கை யைப் பெறும் என்பதும் கேள்விக்குரியதே.

ஆனால் தற்போதைய அரசாங்கக் கட்சியாக இருந்தாலும் சரிதான், எதிர்கட்சிகளாக இருந்தா லும் எதிர்காலத்தில், எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டாலும் சரிதான், இனப்பிரச் னைக்கு ஓர் அரசியல் தீர்வை எட்டும்வரை எவ ராலும் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட ஓர் அமை தியான அரசியல் சூழ்நிலையை இலங்கையில் எட்ட முடியாது என்றே கூறலாம்.

---

சுவாமி மண்டபத்தில் நடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த அநு. வை. நாகராஜனின் "தேடலும் பதித்தலும்" நூல் வெளியீட்டு விழாவிற்கு அவர் தலைமை வகித்து மேலும் பேசுகையில், ஐன்ஸ் டன், நியூட்டன் போன்ற பெரும் விஞ்ஞானிகளின் வாழ் வில் இடம்பெற்ற சம்பவங் கள் பரவலாகஅறியப்படுவதன் ஊடாகபுதியகண்டுபிடிப்புகளு க்கு வித்திடப்படலாம்என்றும்

## சந்திப்பு

வடமராட்சி கலை பண் பாட்டுக் கழகத்தின் மேஜர் மோகன் கலைக்கூடத்தில் எழுத்தாளர்கள், கலைஞர்க ளுடனான சந்திப்பு இன்று பிற்பகல் 2-00 மணிக்கு வடம ராட்சி கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு பாஸ்கரன் தலைமையில் நடை பெறும்.

---

கையைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவும் நாட்டை ஒரு யுத்தகால நிலைமையில்வைத் திருக்குமாறு எதிர்க்கட்சித் தலைவியும், சிறிலங்கா சுதந் திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண் டாரநாயக்கா அரசாங்கத் தை வற்புறுத்திக் கேட்டுள் ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

கடைப்பிடித்தது போல சகல மட்டங்களிலும் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் சகல விதமான கேளி க்கைகளுக்காகவும் செலவிடப் படும் ஊதாரித்தனமானசெல வுகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள் ளார்.

இதன் மூலம் சேமிக்கப்படும் பணத்தை கிழக்கு வடமத்திய

லைக் கிராமங்களுக்கு ஒருங்கி ணைக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட் டுள்ளார்.

அரசாங்கம் ஒரு உதாரண மாகத் திகழ்ந்தால், நாட்டு மக்கள் எந்த ஒரு தியாகத்தை யும் செய்வதற்கு தயாராக வுள்ளனர் எனவும் அவர்இந்த அறிக்கையில் மேலும்தெரிவித் துள்ளார்.

---

# அணுவாயுத உற்பத்தியினை பாகிஸ்தான் கைவிட வேண்டும்

## - அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து

(வாஷிங்டன்)

ஓர் அணு ஆயுத நாடாக வருவதற்கான தனது முயற்சி களை கைவிடாத வரையில் பாகிஸ்தானுக்கான ராணுவ பொருளாதார உதவிகள் எது வும் வழங்கப்படாதென அமெ ரிக்க அதிகாரிகள் மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித் துள்ளனர்.

அணுவாயுதப் பரவலைத் தடை செய்யும் விடயத்தில் அமெரிக்கா மிகவும் அக்கறை யாக உள்ளது எனத் தெரிவித் துள்ள வாஷிங்டன் அதிகாரி கள் இந்தப் பிரச்சினையை அமைதியான முறையில் தீர்க்க வேண்டுமென்பதற்காக தாம் நவாப்ஷெரிப் அரசுடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஏற் கனவே ஆரம்பித்துள்ளதாக வும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானுக்கான அமெ ரிக்காவின் தூதுவராக நியமிக் கப்பட்டுள்ள ஜோன்கமரன் மான்ஜூ இந்தச் செய்தியை உறுதிப்படுத்தியுள்ளார் இந்த விவகாரம் தொடர் பான பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வதற்காக அமெ ரிக்காவின் பிரதான ராணுவத் தளபதி ஜெனரல் ஆர். ஸல்லி இஸ்லாமாபாத் சென்றிருந்த தாகவும் அவர் சொன்னார்.

இந்த விடயம்தொடர்பான இருதரப்புப் பேச்சு வார்த்தை களுக்கு மேலதிகமாக அணு வாயுதங்களைக் கட்டுப்படுத் துவதற்கான பிராந்திய அமை ப்பு ஒன்றை ஏற்படுத்தும் முய ற்சியிலும் தாம் ஈடுபட்டுள்ள தாகத் தெரிவித்த அவர் இதில் பாகிஸ்தானும் இந்தியாவும் உட்படுத்தப்படும் என்றுகுறிப் பிட்டார்.

பாகிஸ்தானுக்கான 600 மில்லியன் டொலர் அமெ ரிக்க உதவி, அணுவாயுத உற் பத்திகளில் பாகிஸ்தான் ஈடு பட்டுள்ளது என்ற குற்றச்சா ட்டின் பேரில் 1990ஆம் ஆண் டில் நிறுத்தி வைக்கப்பட்டது தெரிந்ததே. புஷ் அரசு மேற் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்தே இந்த உதவிகள் நிறுத்தப்பட்டன.

ஆனால் ஆயுத பொருளா தார உதவிகள் நிறுத்தப்பட்டு ள்ள போதிலும் கூட வர்த்தக ரீதியான ஆயுத விற்பனை தொடர்ந்து மேற்கொள்ளப்ப டும் என அறிவிக்கப்பட்டிருந் தது.

## 2-ம் உலக யுத்தவிமானியின் எலும்புகள் கண்டுபிடிப்பு

(பரிஸ்)

இரண்டாவது உலக யுத்தத் தின் போது உயிரிழந்த விமான மோட்டி ஒருவரின் முள் எலும் புகளும், அவரின் சீருடைகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய விமானப் படைக்குச் சொந்தமான யுத்த விமானமொன்று இரண்டா வது உலக யுத்தத்தின் போது பிரான்ஸ் நோர்மன்டி பிராந்தி யத்தில் சுட்டு வீழ்த்தப்பட் டது.

ஆய்வுப்பணிகளில் ஈடுபட்டி ருந்த பற்றிக் டிலாஹே தாம் பயன்படுத்திய உலோக உபகர ணத்தின் துணையுடன் இந்த விமானமோட்டியின் எலும்பு களைக் கண்டு பிடித்தார்.

உபகரணம் காட்டிய சமிக் ஞைக்கமைய நிலம் தோண்டப் பட்டபோது அணிந்திருந்த பிரித்தானிய விமானப்படைச் சீருடையின் பாகங்களும் சில தஸ்தாவேஜுக்களும் தோண்டி எடுக்கப்பட்டது. 1942ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இந்த விமானம் சுடப்பட்டதாக அறிவிக்கப் படுகிறது.

## வாழப்பாடி ராமமூர்த்தி மீண்டும் மந்திரியாவார்?

(சென்னை)

இந்திய மத்திய மந்திரி சபையில் மாறுதல் செய்யப் படும்போது தமிழககாங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராம மூர்த்தி மீண்டும் மந்திரி ஆவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

புதிய மந்திரிகள் யார்என்று பல்வேறு ஊகங்கள் கூறப் பட்டு வருகின்றன, காவிரி பிரச்சினைக்காக பதவி வில கிய வாழப்பாடி ராமமூர்த்தி மீண்டும் மந்திரி ஆகலாம் என்று கூறப்படுகிறது.

மராட்டிய முன்னாள் முத ல்வர் ஏ. ஆர். அந்துலே, ராஜஸ்தான் முன்னாள் முதல் வர்சிவசரன் மாத்தூர், கே-பி-சிங்தேவ் (ஒரிசா), அரவிந்த் நேகாம் (மத்திய பிரதேசம்) ஆகியோருக்கு அமைச்சர்பதவி அளிக்கப்படலாம்என்றும்தெரி கிறது.

தமிழகத்தில் வாழப்பாடி, மூப்பனார் கோஷ்டியை சேர் ந்த இரண்டு பேருக்கு மந்திரி பதவி கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது-

இதேநேரம் யூனியர் அமைச் சர்கள் சிலர் அமைச்சரவை யில் இருந்து நீக்கப்படலாம் என்றும்கூறப்படுகிறது.

## ஈராக்கில் தேடுதல்

(பாக்தாத்)

ஐ நா .ஆயுதக் கண்காணி ப்புக் குழுவினர் ஈராக் ஸ்கட் ஏவுகணைகளைத் தேடும் தம் முயற்சியில் இரண்டாவது நாளாகதொடர்ந்து ஈடுபட்ட தாக அறிவிக்கப்படுகிறது.

ஏவுகணைகளைத் தேடும் இரண்டாவது நாளைய முய ற்சி எங்கே இடம்பெற்றது என்ற விபரங்களை குழுவினர் வெளியிடவில்லை.

ஐம்பது பேர் கொண்ட ஐ. நா ஆயுதக் கண்காணிப்புக் குழுவுககு ரஷ்யரான நிக்கி ட்டா ஸ்மிடோலக் தலைமை வகிக்கின்றார்.

## வழக்கறிஞர்கள் அதிகரிப்பு சிங்கப்பூர் பிரதமர் கவலை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் புதிய வழக்கறி ஞர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆராய அட்டோர்னி ஜென ரல் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூரின் பொருளாதா ரம் அதிகப்படியான வழக்கறி ஞர்களினால் விரயம் செய்யப் படலாம் என பிரதமர் கோ சொக்டொங் கவலை அடைந் திருப்பதே இதற்குக் காரணம்.

"ஒரு சிறிய நீர்த்தடாகத் தில் அளவுக்கதிகமான வழக் கறிஞர்கள் நீந்த இடமின்றி மூச்சு விடச் சிரமப்படுவது போன்ற காட்சி என் மனதில் தென்படுகின்றது" என சிங் கப்பூர் வழக்கறிஞர் சங்கத் தில் பேசிய பிரதமர் குறிப் பிட்டார்.

போதுமான சட்ட அலுவல் கள் இல்லாமல் போனால் இந்த நிலை ஏற்படக் கூடாது என்பதே எனது அச்சம் என் றார் பிரதமர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சிங்கப்பூரில் வழக்கறிஞர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகி உள்ளது. தற்போது அங்கு 2158 வழக்கறிஞர்கள் உள்ள னர். அதாவது 10,000 பே ருக்கு 79 வழக்கறிஞர்கள்.

## இஸ்ரேலுடன் பேசுவதற்கு அரபுத்தலைவர்கள் முயற்சி

(அம்மான்)

மேற்காசிய சமாதானப் பேச்சுக்களின் தொடர்ச்சியில் அரபுக்களுக் கிடையிலான பேச்சுவார்த்தைகள் ஜோர் தான் தலைநகர் அம்மானில் இடம் பெற்றது. இரண்டு நாள் விவாதங்களுக்குப் பின் னர் இப்பேச்சுகள் நேற்று முன் தினம் முடிவுற்றது.

அமைதிக்கான இடம்

அமைதிக்கான இடம் என்ற கொள்கையின் அடிப்படையில் இஸ்ரேலுடன் உடன்படிக்கை யொன்றை எட்டப் போவ தான முயற்சியில் ஈடுபடப் போவதாக அரபு வெளியுறவு அமைச்சர்கள் கூறியுள்ளனர். அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் எதிர்வரும்புதனன்று வாஷிங் டனில் நடைபெறவுள்ளது

## இந்தோனேசிய அதிபராக தொடர்ந்தும் சுகார்ட்டோ

(ஜாகார்த்தா)

இந்தோனேசிய அதிபர் சுகார்ட்டோ மேலும் ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளார். கட ந்த இருபத்தேழு ஆண்டுக ளாக பதவியிலிருந்து வரும் ஜனாதிபதி சுகார்ட்டோ தற் போது 71 வயதுடையவராக இருக்கும்போதும் மேலும் ஐந்து ஆண்டுகள் பதவியமர்த் திட அந்நாட்டின் ஆளும்கட்சி முன்வந்துள்ளது, கட்சியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட சுகார்ட்டோ கடமை அழைப் பைத் தவிர்க்க முடியவில்லை என்று கூறியுள்ளார்.

## கடையடைப்பு

(சென்னை)

திருநெல்வேலி கட்டபொம் மன் மாவட்டத்தில் ஆலைத் தொழிலாளர் மீது கடந்த சனி யன்று பொலிசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் செய்தமைக்கு ஆட்சேபம் தெரி வித்து திருநெல்வேலி மாவட் டம் எங்கும் நேற்று முன்தினம் கடையடைப்பு நடைபெற் றது. தி.மு.க., சி.பி.ஐ., சி.பி.எம். ஆகிய கட்சிகள் அழைப்பு விடுத்திருந்த கடை யடைப்பிற்குப் பெரும் ஆதரவு கிடைத்திருப்பதாகச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

ஈழநாதம்

## வாணிபம், தொழில்கள் பதிவிற்கான கால அட்டவணை

(யாழ்ப்பாணம்)

சங்கானை, தெல்லிப்பழை, உடுவில் அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள வாணிபம் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்வதற்கான கால அட்டவணையை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது இக்கால அட்டவணை வருமாறு:

| வாணிபம்/தொழில் தன்மை | சங்கானை உ அ அ.பிரிவு | தெல்லிப்பழை உ.அ அ பிரிவு | உடுவில் உ.அ.அ.பிரிவு |
|---|---|---|---|
| 1. பவுண், பொன், வெள்ளி நகை வாணிபம், நகை உற்பத்தித் தொழில் அடைவு கடை. | 23-10-92 — 26-10-92வரை | 31-10-92 — 03-11-92வரை | 04-11-92 — 07-11-92 வரை |
| 2. பலசரக்கு வாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 3. புடவை வாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 4. கட்டிடப் பொருள்கள்/மின்சார உபகரணங்கள்/மோட்டார் உதிரிப்பாக வாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 5. விடுதிகள்/மதுபானச்சாலை தேநீர்சாலை | 27-10-92 — 30-10-92வரை | ,, ,, | 08-11-92 — 11-11-92வரை |
| 6. தொழில் நிறுவனங்கள் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 7. உயர்தொழில்/கண்ணியத் தொழில் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 8. ஏனையவை | ,, ,, | ,, ,, | ,, ,, |

ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்

## காரைநகர் மக்களுக்கு உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த காரைநகர் மக்களுக்கு ஒக்டோபர் மாதத்திற்கான உலர் உணவு தற்பொழுது உள்ள காரைநகர் பல நோ. கூ. சங்கங்களின் சகல கிளைகளிலும் நேற்று முன்தினம் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இவ் உலர் உணவை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளும்படி மேற்படி மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் அத்துடன் பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு அரைக்கிலோ சீனி (ஒருகிலோரூபா 27.75 இற்கு) விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

சர்வதேச மன்னிப்புச் சபை

## உறுப்பினர்கள் இவ்வாரம் கொழும்பு வருவர்

சர்வதேச மன்னிப்புச் சபையின் இரு உறுப்பினர்கள் இவ்வாரம் கொழும்பு வருகின்றார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னிப்புச் சபையின் குழு ஒன்று கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போது அரசாங்கத்துக்கு முன்வைத்த விதப்புரைகளின் அமுலாக்கம் எவ்வாறு இருக்கின்

சேர்ந்த எலிசபெத் நிசான், இங்கிரிட் மசாஜ் ஆகிய இருவருமேவருகிறார்கள் என்றும்,

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அவர்கள் சுற்றுலா மேற்கொள்வர் என்றும் கூறப்படுகிறது.

மீனவர்

கடற்பரப்பில் சில மீனவர்கள்

## செஞ் சோலை கண்காட்சியும் பரிசளிப்புவிழாவும்

செஞ்சோலையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் செஞ்சோலைச் சிறுவர் இல்லத்தில் இன்று காலை 10.30 மணிக்கு கண்காட்சி ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து மாலை 4.00 மணி முதல் பரிசளிப்பு விழா, சிறப்புரை ஆகியனவும் இறுதியாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்

(மானிப்பாய்)

நேற்று முன்தினம் கிளாலி கடற்பரப்பை நோட்டமிட்டு சுற்றிவந்த உலங்கு வானூர்தி ஒன்று பெருமளவு துண்டுப் பிரசுரங்களை வீசிச் சென்றுள்ளது.

இத் துண்டுப் பிரசுரத்தில் முப்படைகளின் அறிவுறுத்தலாகக் ''கிளாலி கடற்பரப்பில் போக்குவரத்து எதனையும் மேற்கொள்ள வேண்டாம்''

## பரீட்சைகள்

### சட்டக்கல்லூரி

(யாழ்ப்பாணம்)

சட்டக்கல்லூரி அனுமதிக்கான போட்டிப்பரீட்சை அடுத்த மாதம் 8 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது இதற்கான பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

★ ★ ★

### சுங்கம், அஞ்சல்

ஒன்றுபடுத்திய சுங்கச்சேவையில் சுங்கச் சோதனையாளர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சையும் அஞ்சல் அதிபர்கள் சைகையாளர்களுக்கான பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப்பரீட்சையும் இம் மாதம் 31 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது.

★ ★ ★

### கல்வி நிர்வாக சேவை

இலங்கை கல்வி நிர்வாக சேவை, கணக்காளர் சேவை மற்றும் இவற்றையொத்த சேவைகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைகள் இம் மாதம் 31 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 6 ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

### டிப்ளோமா கல்வி

கல்வி டிப்ளோமா முழு நேரப்பயிற்சி நெறிக்கு ஆட்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சை அடுத்த மாதம் 14 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. (க)

பௌதிகவியல் பகுதிII

## பரீட்சை வினாத் தாள்கள் விமானம் மூலம் வரும்?

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 26ஆம் திகதி நடைபெறவிருக்கும் பௌதிகவியல் II பகுதிக்கான விசேட பரீட்சையின் வினாத்தாள்களை கொழும்பில் இருந்து விமானமூலம் பலாலிக்கு எடுத்துவர யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இப் பரீட்சை வினாத்தாள்களை எடுத்து வருவதற்கென கல்வித்திணைக்கள உத்தியோகஸ்தர் ஒருவர் கடந்தவாரம் கொழும்பு சென்றுள்ளார் என தெரியவருகின்றது. இவரே கொழும்பில் இருந்து வினாத்தாள்களை விமான மூலம் பலாலி விமான நிலையத்திற்கு எடுத்துவந்து. அங்கிருந்து காங்கேசன்துறை ஊடாக கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவருவார் என தெரியவருகின்றது. (பா)

நான்

கள். நான் அதனைச் செய்யப் போவதில்லை. ஆனால் முதற்

# ஜெயலலிதா பதவி விலக தி. மு. க. காலக்கெடு விதிப்பு

(சென்னை)

தமிழகமெங்கும் நவம்பர் 25 ஆம் திகதி தி.மு.க. பந்த் அனுஷ்டிக்கவுள்ளது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பதவி விலகாவிட்டால் தமிழ் நாடு எங்கும் நவம்பர் 25 ஆம் திகதி பந்த் அனுஷ்டிக்கப்படும் என்றுதிராவிட முன்னேற்றக் கழகம் காலக்கெடு கொடுத்துள்ளது.

இதேவேளை, ஜனதாக் கட்சித் தலைவரான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியும் செல்வி ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என்று எச்சரித்துள்ளார். இந்திய அரசியல் யாப்பின் 190 மற்றும் 191 ஷரத்துக்களை ஜெயலலிதா மீறி விட்டார் என்றும், அதற்காக அவர் சட்டப்படி பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒக்டோபர் 26 ஆம் திகதிக்குள் ஆளுநர் இதற்குச் செவிசாய்க்காவிட்டால் தாம் உச்ச நீதி மன்றை அணுகப் போவதாக அவர் எச்சரித்துள்ளார்

ஜெயலலிதா மீது வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி தர மறுத்துவிட்டால் தி. மு. க. வினரும் நீதி மன்றம் செல்ல முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

தி.மு.க. ஆளுநரிடம் சமர்ப்பித்த மகஜரில் ஜெயலலிதா மீது 18 குற்றச்சாட்டுக்கள் ஆதாரங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2,000 கார்கள் சூழ ஜெயலலிதா பவனி

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று மதுரையிலிருந்து சிவகங்கை வரையில் இரண்டாயிரம் கார்கள் தொடரப் பவனியாகச் சென்றார். அங்கு 62 கோடி ரூபாவுக்கு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்தார்

பட்டப் பகலில் பத்தாயிரம் ரியூப்பல்புகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. 50 வரவேற்பு வளையங்களும், 45மாபெரும் கட்அவுட்களும் வீதிகள்தோறும் அவரை வரவேற்றன. பள்ளிச் சிறுவர்கள் வீதியின் இருமருங்கிலும் அணிவகுத்து நின்றனர். மக்கள்கட்சிக்கொடியுடன் நின்றனர். மாவட்டத்தில் பள்ளி விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது

சென்னையிலிருந்து சிறப்பு விமான மூலமே அவர் மதுரை வந்து சேர்ந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது 45 கிலோ மீற்றர் சிவகங்கை வரை காரில் சென்றார்.

## விஷம் கலந்த பருப்புவகை அவுஸ். இருந்து வருகிறது

[கொழும்பு]

விஷம் கலந்த உயிருக்கே ஆபத்தான லென்ரில்ஸ் என்ற பருப்பு வகையை அவுஸ்திரேலியா சிறிலங்காவுக்கு ஏற்றுமதிசெய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது ஏனைய ஆசிய நாடுகளுக்கும் இந்தப் பருப்பு வகை சந்தைப்படுத்தப்படவுள்ளது

இது குறித்து வெளிவிவகார அமைச்சு முழுக்கவனத்துடன் செயற்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேற்படி அமைச்சு சுங்கத்திணைக்களம் வர்த்தக அமைச்சு, உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சு, துறைமுக அதிகார சபை ஆகியவற்றை விழிப்புடனிருக்கும்படி எச்சரித்துள்ளது.

இதேவேளை, கான்பெராவில் உள்ள சிறிலங்கா உயர்ஸ்தானிகராலயம் ஏற்கனவே ஒரு தொகுதி பருப்பு வகை கொழும்பு வந்தடைந்துள்ளதாக அச்சம் தெரிவித்துள்ளது இதில் அவுஸ்திரேலியாவில் இயங்கும் சிறிலங்கா உயர் ஸ்தானிகராலயக் கிளையும் இந்தப் பருப்புக் குறித்து அரசுக்கு அறிவித்துள்ளது பருப்பு கொழும்புத் துறைமுகத்திலிருந்து வெளியில் கடத்தப்பட்டு விற்பனையாகலாம் என்றும் அஞ்சப்படுகிறது. அவுஸ்ரேலிய அரசு இந்தப் பருப்பில் நச்சுத் தன்மை கலந்திருப்பதாகக் கூறி உணவுக்கு உகந்ததல்ல என ஏலவே அறிவித்திருந்தது. இச்செய்தி அவுஸ்ரேலிய செய்தித் தாள்களில் 1991 இல் வெளியாகி இருந்தது.

தென் அவுஸ்ரேலிய மாநிலங்களான விக்ரோறியா, நியூசவுத்வேல்ஸில் லென்ரில்ஸ் பயிரிடப்படுகிறது. மைசூர் பருப்புக்கும் லென்ரில்சுக்கும்பெரிய

சீனிக்குப்

உறுதி செய்த ஆய்வாளர், தமது ஆய்வின் முடிவை அறிக்கை ஒன்றின்மூலம் தெரிவித்துள்ளார்.

சுகந்தி சோடாவில் ஒரு கிலோ கிராம் எடைக்கு 332 மில்லிகிராம் சக்கரினும், தேவி சோடாவில் ஒரு கிலோகிராம் எடைக்கு 168 மில்லி கிராம் சக்கரினும் கலக்கப்பட்டிருப்ப

## கண்காட்சியும் கலைவிழாவும்

(தென்மராட்சி)

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி. ப. ஒரு மணிக்கு கல்விக் கண்காட்சியும், கலைவிழாவும் நடைபெறவுள்ளது இதில் முதன்மை அதிதியாக தென்மராட்சிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதனும் சிறப்பு அதிதிகளாகத் தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம் பிள்ளை, நகரசபை ஆணையாளர் திரு. அ. நவரத்தினராஜா ஆகியோரும் கலந்து கொள்வார்கள் கண்காட்சி சனி, திங்கள் ஆகிய தினங்களிலும் தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிய வருகிறது (35)

## விபத்தில்பலி

(தென்மராட்சி)

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞரொருவர் பிரான்ஸ் நாட்டில் கடந்த வாரம் நடைபெற்ற ரயில் விபத்தில் பலியாகியுள்ளார்.

நுணாவில், தாளையம்பதி வீதியைச் சேர்ந்த நாகநாதன் நிர்மலநாதன் (வயது 22) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவராவார். (35)

ஊட்டச்சத்து

வசதிகளை இழந்து முகாம்களிலும், மீள குடியமர்த்தப்பட்ட இடங்களிலும் வாழ்கிறார்கள் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

நகர் பல நோ. கூ. சங்கங்களின் சகல கிளைகளிலும் நேற்று முன்தினம் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

டன் பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு அரைக்கிலோ சீனி (ஒருகிலோரூபா 27.75 இற்கு) விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

சர்வதேச மன்னிப்புச் சபை

# உறுப்பினர்கள் இவ்வாரம் கொழும்பு வருவர்

சர்வதேச மன்னிப்புச் சபையின் இரு உறுப்பினர்கள் இவ்வாரம் கொழும்பு வருகின்றார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னிப்புச் சபையின் குழு ஒன்று கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டபோது அரசாங்கத்துக்கு முன்வைத்த விதப்புரைகளின் அமுலாக்கம் எவ்வாறு இருக்கின்றது என்பதை அனுமானிக்கவே இவர்கள் இவ்விஜயத்தை மேற்கொள்கிறார்கள் என்றும்,

சர்வதேச மனனிப்புச் சபையின் ஆசிய திணைக்களத்தை சேர்ந்த எலிசபெத் நிசான், இங்கிரிட் மசாஜ் ஆகிய இருவருமேவருகிறார்கள் என்றும்,

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அவர்கள் சுற்றுலா மேற்கொள்வர் என்றும் கூறப்படுகிறது.

மீனவர்

கடற்பரப்பில் சில மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதிக்கு விரைந்து வந்த கடற்படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடாத்திய தாகஅறியவருகின்றது. (82)

சண்டிலிப்பாய் செஞ்சோலைச் சிறுவர் இல்லத்தில் இன்று காலை 10.30 மணிக்கு கண்காட்சி ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து மாலை 4.00 மணி முதல் பரிசளிப்பு விழா, சிறப்புரை ஆகியனவும் இறுதியாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்

(மானிப்பாய்)

நேற்று முன்தினம் கிளாலி கடற்பரப்பை நோட்டமிட்டு சுற்றிவந்த உலங்கு வானூர்தி ஒன்று பெருமளவு துண்டுப் பிரசுரங்களை வீசிச் சென்றுள்ளது.

இத் துண்டுப் பிரசுரத்தில் முப்படைகளின் அறிவுறுத்தலாகக் ''கிளாலி கடற்பரப்பில் போக்குவரத்து எதனையும் மேற்கொள்ள வேண்டாம்'' எனவும் மீறுவோர்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூட்டாக அறிக்கை ஒன்றை பிரசுரித்துள்ளனர்(07

## விமானம் மூலம் வரும்?

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 26ஆம் திகதி நடைபெறவிருக்கும் பௌதிகவியல் II பகுதிக்கான விசேட பரீட்சையின் வினாத்தாள்களை கொழும்பில் இருந்து விமானமூலம் பலாலிக்கு எடுத்துவர யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இப் பரீட்சை வினாத்தாள்களை எடுத்து வருவதற்கென கல்வித்திணைக்கள உத்தியோகஸ்தர் ஒருவர் கடந்தவாரம் கொழும்பு சென்றுள்ளார் என தெரியவருகின்றது. இவரே கொழும்பில் இருந்து வினாத்தாள்களை விமான மூலம் பலாலி விமான நிலையத்திற்கு எடுத்து வந்து. அங்கிருந்து காங்கேசன்துறை ஊடாக கப்பல் மூலம் பருத்தித் துறைக்கு எடுத்து வருவார் என தெரியவருகின்றது. (பா)

நான்

கள். நான் அதனைச் செய்யப் போவதில்லை. ஆனால் முதற்கட்ட நடவடிக்கையாக மேற்கு மாகாண சபை உறுப்பினர் டாக்டர் ஐ.எம். இலியாஸ் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார் என்றார் அவர்.

சீனிக்குப்

உறுதி செய்த ஆய்வாளர், தமது ஆய்வின் முடிவை அறிக்கை ஒன்றின்மூலம் தெரிவித்துள்ளார்.

சுகந்தி சோடாவில் ஒரு கிலோ கிராம் எடைக்கு 332 மில்லிகிராம் சக்கரினும், தேவி சோடாவில் ஒரு கிலோகிராம் எடைக்கு 168 மில்லி கிராம் சக்கரினும் கலக்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்த வகைச் சோடாவை உட்கொள்வதன் மூலம் பின்விளைவுகள் ஏற்படும் என்றும், இந்த ரகச் சோடாவை உடன் விற்பனையிலிருந்து மீளப் பெறுமாறும் யாழ். பிரதேச சுகாதார சேவைகள் வட்டாரம் எச்சரித்துள்ளது.

குடிபானங்களில் சக்கரின் கலப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பது குறிப்பிடத்தக்கது.

மூளாய்

நடாத்தப்பட்டுள்ளது

நேற்றுக் காலையும், நேற்று முன்தினம் மாலையும் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல்களின் போது பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன இதனால் இப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர். (க)

கொழும்பு

''குமண'' கப்பலில் 423 தபால் பொதிகளும் நேற்று மாலை யாழ். பிரதான தபாலக ஊழியர்களினால் பருத்தித்துறையில் இருந்து யாழ். பிரதான தபாலகம் எடுத்து வரப்பட்டது.

இவை இன்று உடன் தரம் பிரிக்கப்பட்டு இன்றே சகல இடங்களிற்கும் விநியோகிக்கப்பட உள்ளன என யாழ் பிரதான தபாலக ஊழியர் ஒருவர் தெரிவித்தார், (பா) (82)

பொலிஸ்

களப்பு போரதீவு பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் லீவில் சொந்த ஊருக்குச் சென்றிருந்த சார்ஜன்ட் இந்திரகுமார் கடமைக்குத் திரும்பும்போது சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

கொழும்பு வந்தடைந்துள்ளதாக அச்சம் தெரிவித்துள்ளது இதில் அவுஸ்திரேலியாவில் இயங்கும் சிறிலங்கா உயர் ஸ்தானிகராலயக் கிளையும் இந்தப் பருப்புக் குறித்து அரசுக்கு அறிவித்துள்ளது பருப்பு கொழும்புக் துறைமுகத்திலிருந்து வெளியில் கடத்தப்பட்டு விற்பனையாகலாம் என்றும் அஞ்சப்படுகிறது. அவுஸ்ரேலிய அரசு இந்தப் பருப்பில் நச்சுத் தன்மை கலந்திருப்பதாகக் கூறி உணவுக்கு உகந்ததல்ல என ஏலவே அறிவித்திருந்தது. இச்செய்தி அவுஸ்ரேலிய செய்தித் தாள்களில் 1991 இல் வெளியாகி இருந்தது.

தென் அவுஸ்ரேலிய மாநிலங்களான விக்ரோறியா, நியூசவுத்வேல்ஸில் லென்ரில்ஸ் பயிரிடப்படுகிறது. மைசூர் பருப்புக்கும் லென்ரில்சுக்கும்பெரிய அளவில் வித்தியாசமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவுஸ்ரேலிய ஏற்றுமதி வர்த்தகர்களே இந்த லென்ரில்ஸ் ஏற்றுமதியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் திரு. கு. குருநாதபிள்ளையின் ''நவீன முறை ஆங்கிலம்'' (New Method English) நூல் வெளியீட்டு விழா இன்று 22ஆம் திகதி வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் திரு. கா கணேசதாசன் தலைமையில் மாலை 4.00 மணிக்கு நடைபெறும். (24)

## விபத்தில்பலி

(தென்மராட்சி)

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞரொருவர் பிரான்ஸ் நாட்டில் கடந்த வாரம் நடைபெற்ற ரயில் விபத்தில் பலியாகியுள்ளார்.

நுணாவில், தாளையம்பதி வீதியைச் சேர்ந்த நாகநாதன் நிர்மலநாதன் (வயது 22) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவராவார். (35)

ஊட்டச்சத்து

வசதிகளை இழந்து முகாம்களிலும், மீள குடியமர்த்தப்பட்ட இடங்களிலும் வாழ்கிறார்கள் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

நல்லூர், பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு, பச்சைனூர், கிளிவெட்டி ஆகிய கிராமங்கள் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டும் இலங்கைத்துறையும், முகத்துவாரமும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய இடங்களாகும்: ஆனால் பாதுகாப்புக் காரணங்களினால் அந்த இரு கிராமங்களையும் எம்மால் அடைய முடியவில்லை என்றும்,

ஊட்டச் சத்துள்ள உணவு வகைகளை வழங்கி சிறார்களின் நலன்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனியாது விட்டால், தேக ஆரோக்கியம் மற்றும் உளவளம்பாதிக்கப்பட்ட ஒருதலைமுறைதான் மிஞ்சும் என்று ஞானகுணாளனன் எச்சரித்துள்ளார்.

## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதியும்

வீர ஜனனம்;
10-3-1966



வீரச்சாவு:
19-9-1991

### வீரவேங்கை கார்த்திகா

(நடராசா வசந்தா)

கார்த்திகாவே!

எம் குடும்பத்தின் வசந்த தீபமே!
உன் விடுதலை வேட்கையால்
சுதந்திர சிறகை அகல விரித்து
அண்ணனின் ஆணைக்கு
செயல் வடிவம் கொடுத்து
கார்த்திகைத் தீபமாய்த் திகழ்ந்து
மணலாறில் போராடி
வீரகாவியம் படைத்து விட்டாய்!

இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலர் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

உமது பிரிவால் வாடும்
குடும்பத்தினர்
(3499)

சாவகச்சேரி – சங்கத்தானை – இத்தியடி
வீரகத்தி விநாயகர் தேவஸ்தான
கூட்டுப்பிரார்த்தனை

## 14 - வது ஆண்டு நிறைவு விழா

காலம்: 23-10-1992 வெள்ளிக்கிழமை
இரவு 7 மணி

சிறப்பு நிகழ்ச்சி: பட்டிமன்றம்:
பெண்மையாற்றலில் பெரிதும் சிறந்தவள்
கண்ணகியா? பாஞ்சாலியா? சீதையா?

நடுவர்: இ. ஜெயராஜ்
(கம்பன்கழக அமைப்பாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

சங்கத்தானை,
சாவகச்சேரி,

விழா உபயகாரர்கள்
(சி-5278)

யா / அச்சுவேலி மகாவித்தியாலயம்

## நூற்றாண்டு விழா (1892 - 1992)

நூற்றாண்டு விழா காணும் யா/அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் பணிகள் சிறக்க, சேவைகள் தொடர உளம் உவந்து வாழ்த்தும்,

**மா. சிவமூர்த்தி**
(பழைய மாணவன்)
வீடியோ கலாமினி
அச்சுவேலி

[3498]

## தவறி விட்டது

யாழ். வெலிங்டன் சந்திக்கும் பலாலி வீதி இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் மினி பஸ் பேசுடன் திறப்புக் கோர்வையும் பணமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

அ. இராசரத்தினம்
46, மேற்கு சந்தை
யாழ்ப்பாணம்.

(3500)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 21-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 6229

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்
26-767, 26-1791, 24-4238, 40-2829, 28-6853, 24-5529, 24-2680, 22-9127, 26-1991, 27-9661, 26-6070, 27-1937, 27-5077, 40-2295, 24-6243

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்
42-1494, 26-423, 41-7959. 26-3046, 24-5122, 24-7225. 26-3667, 26-1349, 26-8878, 41-9995, 27-5058, 27-5099 40-5216, 24-7087, 26-6320, 40-3073, 26-1343, 42-3114, 40-6979

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.